பொதுசன நூலகம்
மாநகராட்சி மன்று
27-9-1993
யாழ்ப்பாணம்

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5 00

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 புரட்டாதி 12 செவ்வாய்க்கிழமை (28 09 1993) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 304

★ ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டு

# மன்னார், முல்லைத்தீவு பகுதிகளில் இராணுவ நடவடிக்கை ஆரம்பம்

## தமிழீழ பொது கல்வி தேர்வு இன்று ஆரம்பமாகுகின்றது

### 15 ஆயிரம் மாணவர் தோற்றுவர்

தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையினால் வருடந்தோறும் நடத்தப்படும் தமிழீழ பொதுக் கல்வித் தேர்வு திட்டமிட்டபடி இன்று ஆரம்பமாகுகின்றது.

மொத்தம் 15 ஆயிரத்து 631 மாணவர்கள் இத்தேர்வுக்கு தோற்றுகின்றனர்.

யாழ். மாவட்டத்தில் 99 பரீட்சை நிலையங்களில் 11 ஆயிரத்து 952 பேரும், கிளி மாவட்டத்தில் 15 நிலையங்களில் ஆயிரத்து 860 பேரும், முல்லை மாவட்டத்தில் ஏழு நிலையங்களில் ஆயிரத்து 78 பேரும், வவுனியா மாவட்டத்தில் ஆறு நிலையங்களில் 645 பேரும், மன்னார் மாவட்டத்தில் நான்கு நிலையங்களில் 596 பேரும் இப்பரீட்சைக்குத் தோற்றுகின்றனர்.

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி மண்டப இலக்கம் 2 இல் தோற்றும் மாணவர்களின் தேர்வு நிலையம் மட்டுவில் மகா வித்தியாலய மண்டபத்திற்கு மாற்றப்பட்டுள்ளதாக தேர்வு ஆணையாளர் அறிவித்துள்ளார். (உ)

## யாழ்., சாவகச்சேரியில் கொலரா மேலும் பரவுகிறது

யாழ்ப்பாணம், செப். 28

யாழ்ப்பாணப் பகுதியிலும், சாவகச்சேரிப் பகுதியிலும் வாந்திபேதி நோய் மேலும் பரவி வருகிறது.

நேற்று மட்டும் யாழ்ப்பாணம், சாவகச்சேரி ஆஸ்பத்திரிகளில் பதினொரு பேர் அனுமதிக்கப்பட்டனர். இவர்களில் கைதடி நயர் தொழிற்சாலையைச் சேர்ந்தவர்கள் இருவர்; செற்பலியைச் சேர்ந்தவர்கள் மூவர்; நாவற்குழியைச் சேர்ந்தவர்கள் மூவர்; நல்லூரைச் சேர்ந்தவர் ஒருவர்; கொழும்புத்துறையைச் சேர்ந்தவர்கள் இருவர்.

யாழ் ஆஸ்பத்திரியிலும், சாவகச்சேரி ஆஸ்பத்திரியிலும் வாந்திபேதி நோயாளருக்கெனத் தனியான வார்டுகள் திறக்கப்பட்டுள்ளன.

எனினும் யாழ் ஆஸ்பத்திரி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பிரிகேடியர்களாக 11 பேர் பதவி உயர்வு

ஸ்ரீலங்கா இராணுவத்தில் 11 பேர் பிரிகேடியர்களாகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

இராணுவத்தில் அருப்புகள் புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டதை அடுத்து இந்தப் பதவி உயர்வுகள் வழங்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டது.

குணதுங்க, அப்பு ஆராய்ச்சி, வீரசூரிய, நமுனி, ஜெயவர்த்தன, சமரதுங்க, பெர்னாண்டோ, ஜெயசுந்தர, வீரசேகர, பீரிஸ், திலகரத்ன ஆகியோரே பிரிகேடியர்களாகப் பதவி உயர்வு பெற்றுள்ளனர்.

இவர்களில் பிரிகேடியர் நமுனி யாழ்ப்பாண இராணுவக் கமாண்டராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை —

ஸ்ரீலங்கா வான்படையின் பொறியியல் பிரிவில் கடமையாற்றிய எயர் வைஸ் மார்ஷல் பெர்னாண்டோ தமது பதவியில் இருந்து நீங்கியுள்ளனர். (உ-நி)

## தப்பியோடிய சிப்பாய்களை பிடிக்க டி.ஐ.ஜி. உத்தரவு

கொழும்பு, செப். 28

ஸ்ரீலங்கா படையில் இருந்து தப்பியோடிய சிப்பாய்களை உடனடியாக கைதுசெய்து ஒப்படைக்கும்படி ஸ்ரீலங்கா பதில் பொலிஸ் மா அதிபர் டிரோன் டி சில்வா சகல பொலிஸ் நிலையங்களுக்கும் உத்தரவு விடுத்துள்ளார்.

இராணுவத்தில் இருந்து தப்பியோடிய சிப்பாய்கள் பற்றிய பெயர் பட்டியல் சகல பொலிஸ் நிலையங்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா படைகளில் இருந்து பெரும் எண்ணிக்கையானோர் தப்பியோடி இருப்பதால் ஸ்ரீலங்கா படைத்துறை ஆளணியில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது தெரிந்ததே.

இதனைத் தொடர்ந்தே தப்பியோடிய சிப்பாய்களைப் பிடிக்க பொலிஸ் நிலையங்களின் உதவி நாடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

## வங்காலையில் 6 படையினர் பலி

யாழ்ப்பாணம், செப்டெம்பர் 28

மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களில் ஸ்ரீலங்காவின் முப்படைகளும் நேற்று இராணுவ நடவடிக்கைகளை ஆரம்பித்திருப்பதாக ஸ்ரீலங்கா அரசு அறிவித்திருக்கிறது. அந்த இரு மாவட்டங்களிலும் நேற்றுக் காலை முதல் காலவரையறையற்ற ஊரடங்கும் அமுல் செய்யப்பட்டிருக்கிறது.

இதேவேளை மன்னார் மாவட்டம் வங்காலையில் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதல்களில் ஆறு இராணுவத்தினர் உயிரிழந்தனர்.

மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களில் உள்ள இராணுவ முகாம்களுக்கு வெளியே விடுதலைப் புலிகள் அமைத்திருக்கும் பதுங்கு குழிகளை அழிக்கும் நோக்குடனேயே இந்த இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டதாக அரசு தரப்பில் கூறப்பட்டது.

மன்னார், வங்காலையில் நேற்றுக் காலை புலிகள் நடத்திய தாக்குதலில் ஐந்து படையினர் உயிரிழந்ததாகவும் மற்றொரு சிப்பாய் படுகாயமடைந்ததாகவும் அரசவட்டாரங்களை மேற்கோள் காட்டி இந்திய வானொலியும், வெரித்தாஸ் வானொலியும் அறிவித்தன.

விமானப்படையினர் விமானத்திலிருந்து றொக்கட் மற்றும் குண்டுத் தாக்குதல்களை நடத்தியதாகவும் அரசுத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

### புலிகள் அறிவிப்பு

நேற்றுக் காலை 7 மணியளவில் வங்காலையில் அமைந்துள்ள இராணுவக் காவலரணிலிருந்து சுமார் இருநூறு யார் தூரம் வரை சுத்திகரிப்பு வேலைக்காக முன்னேறி வந்த ஏழுக்கும் மேற்பட்ட இராணு

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இளாலிக் கரையில் நேற்றிரவு புக்காரா, ஹெலித் தாக்கு!

யாழ்ப்பாணம், செப். 28

இளாலியில் நேற்றிரவு 7 மணியளவில் படகுச் சேவை இடம்பெற்று கொண்டிருந்த வேளை அப்பகுதியை நோக்கி வந்த இரு புக்காரா விமானங்களும், ஹெலிக்கொப்டர் ஒன்றும் றொக்கட் தாக்குதலையும் துப்பாக்கிப் பிரயோகங்களையும் மேற்கொண்டன.

தொடர்ந்து ஆனையிறவு—பூநகரி முகாம்களில் இருந்து இளாலியை நோக்கி ஷெல் தாக்குதல்களும் நடத்தப்பட்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மீனவருக்கு ஆதரவாக ஹர்த்தால்

சென்னை, செப். 28

அண்மையில் ஸ்ரீலங்கா கடற்படையினரால் தமிழக மீனவர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டதைக் கண்டித்து நாகபட்டினம் காயிதே மில்லத் மாவட்ட மீனவர் சங்கம் நேற்று முழுநாள் ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுத்திருந்தது. இதனால் நேற்று மாவட்டத்தின் மக்களின் வாழ்க்கை நிலை பாதிக்கப்பட்டது.

(உ-க)

## கூற்று தவறானது என்று அறிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 28

"விமானப் படையும் விரைவில் அமைப்போம்! கடற்புலி பிரமுகர் கூறுகிறார்" என்ற தலைப்பில் நேற்றைய உதயனில் வெளியான கூற்றுத் தவறானது என்று—

கடற்புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் ...

(6 ஆம் பக்கம் பார்க்க)

ராஜீவ் கொலை வழக்கு:

## நீதிமன்றம் செல்ல 20 எதிரிகள் மறுப்பு

சென்னை, செப். 28

ராஜீவ் காந்தி கொலை வழக்கு நேற்று மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, 26 எதிரிகளில் இருபது பேர் நீதிமன்றத்தில் ஆஜராக மறுத்துவிட்டார்கள்.

சிறை அதிகாரிகள் அவர்களை பூந்தமல்லி விசேட நீதிமன்றத்துக்குக் கொண்டுவர ஓரளவு பலத்தைப் பாவித்தும் அது பலனளிக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதனால் வழக்கு விசாரணை தொடர்ந்து நடைபெறுவது தடைப்பட்டுள்ளது.

நீதிபதி எஸ். எம். சித்திக்கின் உத்தரவுப்படி, எதிரிகளை நீதிமன்றத்துக்கு கொண்டுசெல்ல சிறை அதிகாரிகள் நேற்று முயற்சித்த போது, சண்முகசுந்தரம், தன

(6 ஆம் பக்கம் பார்க்க)

## 3 கப்பல்களிலிருந்து நேற்று பொருள்கள் இறக்கம்

வடமராட்சி, செப். 28

பருத்தித்துறைக்கு நேற்று வந்து சேர்ந்த 'கோமாரி', 'மெரினாக்' கப்பல்களில் இருந்தும் மற்றும் 'ருகுணு' கப்பலில் இருந்தும் ஒரே நேரத்தில் பொருள்கள் இறக்கப்பட்டன.

'கோமாரி' கப்பலில் 2 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசி, 900 மெற்றிக் தொன் சீனி, பயறு, உழுந்து மற்றும் உணவுப் பொருள்களும்—

'மெரினால்' கப்பலில் 600 மெற்றிக் தொன் மாவும் எடுத்துவரப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்த 'ருகுணு' கப்பலின் மேல் தளத்தில் ஏற்றப்பட்டிருந்த உரம் நேற்று இறக்கி முடிக்கப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரின் சுபீட்சத்துக்கு தன்னை அர்ப்பணித்தவன்

## திலீபனுக்கு புகழாரம்

நீர்வேலி, செப். 28

வருங்கால சந்ததியும் எம்மைப்போல் துன்பங்களையும் துயரங்களையும் சந்திக்கக் கூடாது. நிம்மதியாக சுபீட்சமாக வாழ வேண்டும் என்ற எண்ணத்தில் உண்ணாவிரதமிருந்து தன்னை அணு அணுவாக அர்ப்பணித்தவன் திலீபன்.

நீர்வேலி வாய்க்கால் தரவைப்பிள்ளையார் கோவில் முன்றிலில் நடைபெற்றதிலாகி திலீபனின் 11ஆம் நாள் நிகழ்வில் பேசும் போது துணை அரசியல் பொறுப்பாளர் இளையவன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது: தமிழீழப் போராட்டமானது எத்தனையோ தடைகளைத் தாண்டியுள்ளது. விடுதலைப் புலிகள் தனியே ஆயுதப் போராட்டத்தில் மட்டுமல்ல

(6 ஆம் பக்கம் பார்க்க)

# மயோரி மக்கள் குறித்து சொற்பொழிவு

யாழ்ப்பாணம், செப். 28

"நியூசிலாந்தில் மயோரி மக்களின் நிலை" என்னும் பொருளில் யாழ் பல்கலைக் கழகத்தில் நாளை சொற்பொழிவு ஒன்று நடைபெறும்.

நியூசிலாந்தில் பொறியியல் விரிவுரையாளராகப் பணி புரியும் கலாநிதி நகுலேஸ்வரன் இச்சொற்பொழிவை நாளை காலை பத்து மணிக்கு புவியியல் துறை மண்டபத்தில் நிகழ்த்துவார். (அ)

# சோமாலியாவில் ஐ. நா. வின் ஹெலி சுட்டு வீழ்த்தப்பட்டது

## 3 அ.மெ. படையினர் பலி, 2பேர்காயம்


மொகடிஸு செப். 28

சோமாலியாவில் ஐ நா. அமைதிப் படையினரின் ஹெலிக்கொப்டர் ஒன்று போராளிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டது. இச்சம்பவத்தில் ஐ நா. படையைச் சேர்ந்த மூன்று அமெரிக்க வீரர்கள் உயிரிழந்தனர் மேலும் இருவர் காயமடைந்தனர்.

சோமாலிய கிளர்ச்சித் தலைவர் ஆய்டீடின் போராளிகளே ஹெலியைச் சுட்டு வீழ்த்தியதாகத் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவத்துடன் ஐ. நா. படையைச் சேர்ந்த 56 பேர் சோமாலியாவில் உயிரிழந்துவிட்டனர் என்று அறிவிக்கப்பட்டது. (ஒ)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



(முன்னாள் திட்டமிடல் அலுவலர் வேலணைக் கல்விக்கோட்டம்)

அமரர்

## பொன்னையா சபாரத்தினம்

(அதிபர் யா/ கணேச மகா வித்தியாலயம்)

தோற்றம்: 14 - 01 - 1942
மறைவு: 29 - 08 - 1993

### திதி வெண்பா

தண்ணளியான் சார்ந்தார் தமக்கினியான், பணிவு நலப்
பொன் மனத்தான் பொன். சபாரத்தினவேள்-
கண்ணுதலான்
சீர்பாதம் நாடிச் சென்றான் திரயோ தசி சேர்
பூர்வ பக்கத் தாவணியின் போது.

●

மரணத்தின் பின்னும் எங்கள் நினைவில்
என்றென்றும் வாழுகின்ற எங்கள்
அன்புத் தெய்வமே!
உங்களை அழைக்க வந்த கூற்றுவனும்
இளவில் கரையில் தான்
நெட்டுறக்கம் கொள்ள வைத்தானோ?
தந்தையே!
தங்கள் பிரிவின் துயரில்
வாடித் தவிக்கின்றோம் அப்பா.

### நன்றி நவிலல்

எம் தந்தையாரின் உடலையும், உடைமைகளையும் பத்திரமாக எம்மிடம் கொண்டு வந்து ஒப்படைத்து உதவிய மேன்மைமிகு காவல் துறையினருக்கும், இறுதிக் கிரியையின் போது மலர் வளையம் வைத்து தந்தையின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தித்து புகழுரை ஆற்றியவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி சமர்ப்பித்தவர்களுக்கும் மற்றும் உடன் வந்து உதவிகள் பல புரிந்து எமது துயரில் பங்கு கொண்டவர்களுக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும், மேலும் பல வகைகளிலும் உதவிகள் புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம் 28-09-1993 செவ்வாய் காலை நடைபெற இருக்கும் அன்னாரது ஆத்ம சாந்திக் கிரியைகளிலும் கலந்து சிறப்பிக்குமாறு வேண்டுகின்றோம்.

நன்றி.

மனைவி, மக்கள்.

1, முதலியார் ஒழுங்கை,
நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

(27461)

# விளையாட்டு நிகழ்வுகள்

யாழ். மாநகரசபை சனசமூக நிலையங்களின் சமாசம் அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய விளையாட்டு மைதானத்தில் நடத்திவரும் தாச்சி சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் 3.30 மணி முதல் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் கழக அணி வருமாறு:-

★ திருவள்ளுவர் ச. ச. நிலைய அணிஎதிர் அரியாலை ச. ச. நிலைய அணி.

★ குருநகர் ச. ச. நிலைய அணி எதிர் அரியாலை காந்தி ச. ச. நிலைய அணி.

○ ○ ○

அரியாலை திருமகள் சனசமூக நிலையம்வடமாகாண ரீதியில் நடத்தும் வலைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் சனசமூக நிலைய மைதானத்தில் இடம் பெறும் ஆட்டங்களில் பங்கு பற்றும் கழக அணிகள் வருமாறு:-

★ 3.00 மணி:- ஐக்கிய வி. க. "பி" அணி. எதிர் யுத்காமல் வி. க. அணி.

★ 4.00 மணி:- நாயன் மார்கட்டு பாரதி வி. க. அணி எதிர் சென். மேரிஸ் வி. க. அணி.

○ ○ ○

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடத்தப்படவுள்ள மூன்றாவது தடகள விளையாட்டு விழாவின் மாவட்ட மட்டப் போட்டிகள் அடுத்த மாதம் 29, 30, 31 ஆம் திகதிகளில் நடைபெறவிருக்கின்றன.

அதற்கு முன்னோடி நிகழ்ச்சிகளாக வலய மட்டப் போட்டிகள் அந்தந்த வலயங்களில் நடைபெறவிருக்கின்றன.

தடகள விளையாட்டு, கரப்பந்தாட்டம், உதைபந்தாட்டம் வலைப்பந்தாட்டம் ஆகியவற்றுக்கான விண்ணப்ப முடிவு திகதி நாளை மறுதினமாகும்.

விண்ணப்பப் படிவங்களை அவ்வப் பகுதி விளையாட்டு பொறுப்பாளர்களிடம் பெறலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

# கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், செப் 28

நேற்று முன்தினம் வந்து சேர்ந்த 'நிலுமி' கப்பல் மூலம் எடுத்துவரப்பட்ட மண்ணெண்ணெயை, ப.நோ.கூ. சங்கங்களுக்கிடையே விநியோகம் செய்வது தொடர்பாக கூட்டுறவு சங்க முகாமையாளர்களுடனான கலந்துரையாடல் ஒன்று இன்று பிற்பகல் 2 மணிக்கு செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும். (த)

வெளிவந்துவிட்டது

[illegible]

மக்கள்

சஞ்சிகை: 04

ரூபா 10/-

(27458)

## அரியாலை மத்திய விளையாட்டுக் கழகம்

அரியாலை மத்திய விளையாட்டுக்கழகம் நடத்தும் அமரர் ஆலாலசுந்தரம் ஞாபகார்த்த கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் கால் இறுதி ஆட்டங்கள்.

இடம்:- அரியாலை மத்திய விளையாட்டு மைதானம்

28 - 09 - 93 பிற்பகல் 1.00 மணி:-
கொக்குவில் மத்திய சனசமூக நிலைய "பி" அணி
எதிர்
அரியாலை மத்திய விளையாட்டுக் கழக அணி

30 - 09 - 93 காலை 8.00 மணி:-
சென்றலைட்ஸ் சொக்ஸ் அணி
எதிர்
ஜொலியன்ஸ் அணி

பிற்பகல் 1.00 மணி:-
ஜொலி ஸ்ரார்ஸ் அணி
எதிர்
சென்றலைட்ஸ் புளூஸ் அணி

(சி/5974)

ஓம் ஸ்ரீராமஜெயம்

எமது நேற்றைய வெளியீடு

★ ராஜதுரை (ஒறிஜினல்) ★ சிவராத்திரி (ஒறிஜினல்)

## "வீடியோ பகீர்"

935, கே.கே.எஸ். வீதி. தட்டாதெரு.

(27457)

## ST. PATRICK'S COLLEGE JAFFNA
## அனுமதி விண்ணப்பம் - 1994

பின்வரும் வகுப்புகளுக்கு மட்டுமே மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

முதலாம் ஆண்டு: 01 - 02 - 1988 — 31 - 01 - 1989 க்குள் பிறந்திருக்க வேண்டும்.
நான்காம் ஆண்டு: 1985 இல் பிறந்திருக்க வேண்டும்.
ஆறாம் ஆண்டு: 1983 இல் பிறந்திருக்க வேண்டும்.
ஒன்பதாம் ஆண்டு: 1980 இல் பிறந்திருக்க வேண்டும்.

★ விண்ணப்பப் பத்திரம் ரூபா 100-00 (பரீட்சைக் கட்டணம் உட்பட) 01 - 10 - 1993 தொடக்கம் 23 - 10 - 1993 வரை பாடசாலை நேரங்களில் காலை 9-00 — 1-00 வரை கல்லூரிக் காரியாலயத்தில் நேரில் வந்து பெற்றுக் கொள்ளலாம்.

★ நிரப்பப்பட்ட விண்ணப்பப் படிவங்களை 26 - 10 - 1993 ஆம் திகதிக்கு முன் கல்லூரிக் காரியாலயத்தில் காலை 9-00 — 12-00 மணிக்குள் நேரில் வந்து சமர்ப்பிக்கவும்.

★ அனுமதிப் பரீட்சைத் தினம் 06 - 11 - 1993 காலை 8-30 மணிக்கு ஆரம்பமாகும்.

| ஆண்டு | சமூகம் தர வேண்டிய நேரம் (காலை) | பரீட்சை ஆரம்பம் (காலை) |
|---|---|---|
| 9 | 8-00 | 8-30 |
| 6 | 8-00 | 8-30 |
| 4 | 8-00 | 8-30 |
| 1 (இல: 01 - 100) | 8-00 | 8-30 |
| 1 (இல: 101 - 250) | 10-30 | 11-00 |

★ 6ஆம், 9ஆம் வகுப்புகளுக்கு நடத்தப்படும் அனுமதிப் பரீட்சையில் திறமை காண்பிக்கும் முதல் 10% மாணவர்களுக்கு வழமைபோல் யாழ். ஆயரது புலமைப் பரிசில் வழங்கப்படும்.

★ தபால் மூலம் அனுப்பப்படும் விண்ணப்பங்களும், குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் வரும் விண்ணப்பங்களும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

(சி-5973)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் பொன்னையா சபாரத்தினம் B.A. அவர்களின்

(வேலணைக் கல்விக் கோட்ட திட்டமிடல் உதவிக்கல்விப்பணிப்பாளராகக் கடமை புரிந்தவரும், அதிபரும்)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி சிறப்பிதழ்

28 — 09 — 1993

## தமிழ்ப் பகுதிகளின் கல்வி வளர்ச்சிக்கு தீவிரமாக உழைத்த சேவையாளன் சபா

இந்து சமுத்திரத்தின் நித்திலமாய் விளங்கும் இலங்கைத் தீவின் சப்த தீவுகளுள் எல்லாச் சிறப்புகளும் ஒருங்கே அமையப் பெற்ற காரணத்தினால் பொன்கொடு தீவெனப் புகழப்படும் புங்குடுதீவினில், புழுபூத்த பெருங்குடியதனில் பொன்னையா — ஆச்சிமுத்து தம்பதியின் அருந்தவப் புதல்வனாய் 1942இல் அமரர் சபாரெத்தினம் அவர்கள் அவதரித்தார்.

**ஆரம்பக் கல்வி**

தனது ஆரம்பக் கல்வியை புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய மகா வித்தியாலயம், புங்குடுதீவு மகா வித்தியாலயம் ஆகியவற்றிலும், உயர் கல்வியை யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்திலும் கற்றார்.

இவரது பள்ளி வாழ்க்கையிலே சகோதரத்துவம், தலைமைத்துவம், பெரியோரைக் கனம்பண்ணல், பிறருக்கு உதவுதல் போன்ற நற்பண்புகள் காணப்பட்டன. விளையாட்டு வீரனாகவும், சிறந்த தலைமாணவனாகவும் திகழ்ந்தார். பள்ளி ஆசிரியர்கள் உள்ளத்திலே விருப்புக்குரிய மாணவ தலைவனாகவும் திகழ்ந்தார்.

**இலிகிதராக**

உயர் கல்வியை முடித்த இவர் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் இலிகிதராகச் சேர்ந்து தமது தொழிலை ஆரம்பித்தார்.


கருதியும், இடவசதி போதாமை கருதியும் அருகில் இருந்த [illegible] தன் வானான முழு முயற்சியையும் நம்பி அதில் வெற்றியும் கண்டார். இக் காலத்தில் இருபிட்டி சித்தி விநாயகர் வித்தியாலயத்தில் விவசாய ஆசிரியர் இல்லாத குறையைப் போக்கவும், மாணவர் நலன் கருதியும் பகுதிநேர ஆசிரியராகச் சில காலம் கடமையாற்றினார்.

**மும்மொழிகளில் பாண்டித்தியம்**

சமூகத் தொண்டில் ஈடுபாடு கொண்ட இவர் தமது சுற்றாடலிலுள்ள இளைஞர்களை ஒன்று கூட்டி 'கண்ணகை புரம்' சனசமூக நிலையம் உருவாக காரணமாக விளங்கினார். சமூகத் தொண்டனாக மட்டுமன்றி மக்களுக்குச் சிறந்ததோர் வழிகாட்டியாகவும் விளங்கினார். இவரது வழிகாட்டலின் மூலம் பயன் பெற்ற பல இளைஞர்கள் இன்று வெளிநாடுகளில் செல்வ சிறப்புடன் திகழ்வதைக் காணலாம். மும்மொழிகளிலும் பாண்

யில் உயிர்த் துடிப்புடைய இவரது செயற்பாடுகள் எமது கல்விக் கோட்டத்துக்கு வரப் பிரசாதமாக அமைந்தன.

ஒரே நேரத்திலேயே பல வாவான முழு ஒத்துழைப்பையும் நல்கியதோடு பல் வேறுபட்ட விழாக்களையும் தாமே முன்னின்று பூரண நிறைவுற அமைத்து மகிழ்ச் இடமில்லை. யார் என்ன உதவி கேட்பினும் இன்முகத்துடன் தனது இருக்கையை விட்டு எழுந்து சென்று செய்து கொடுப்பதில் இன்பம்



பொன்னையா சபாரத்தினம்

### நித்தமும் வந்தெமை தேற்றுவாய்

ஆதவன் உதிர்ந்ததோ, ஆக்கினைக்
கணைந்ததோ
அன்புறை ஆலயம் இடிந்ததோ
வேதமெய்க் காருண்ய விழிகளும்
மூடிற்றோ
வேதனை சூழ்ந்திருள் படிந்ததோ
ஆலநீள் மரமென அலைவர்க்கு இன்நிழல்
அளித்தமென் பொன்னுளம்
கலைந்ததோ
வேலணைக் கல்விமெய் விளங்கிடத்
திகழ்ந்தசொல்
வித்தகா, விண்ணுனை அழைத்ததோ
அருமையிவ் வுலகிடை அறிவுநர்
குண பொறை
ஆற்றல்கள் ஒன்றிய பெருமையே
உரிமையோ டுதவிடும் உள்ளமும் நல்வழி
உத்தமா, உன்பணி செம்மையே
சற்குரு சத்தியன் சபாரத் தினம்திறல்
சான்றுகள் எவ்வகைப் பேணுவோம்
பொற்றிருப் பூண்டமுப் புகழ்மொழி
வல்லுநன்
பூமுகப் பொலிவென்று காணுவோம்
பூத்தசெம் மலரெனப் புரிந்தநற்
பொழுதெனப்
புன்னகைத் தெம்துயர் ஆற்றுவாய்
நீத்தனை என்பதார்? நினைத்தனை
நினைவிலே
நித்தமும் வந்தெமைத் தேற்றுவாய்

### சபா என்னும் பெரியவனே

வந்தாரை வரவேற்று
வாயெல்லாம் புன்னகையாய்
சொந்தமுடன் உதவி நிற்கும்
தூயவுளம் கொண்டவரே
தந்தா விளக்காக நாயகனே
நீ இருந்தாய்
பந்தமுடன் நாம் பழக
பண்பாளர் யாருள்ளார்.

நீ செய்த வேலையெல்லாம்
நெஞ்சில் அலை மோதுதையா
வாவென்று நீ அழைக்கும்
வார்த்தையெப்போ கேட்பதையா
சாவொன்று வந்ததனை
சகிக்க ஒணா திருக்கின்றோம்
சபா என்னும் பெரியவனே
சதா உன்னை நினைத்திருப்போம்.

### என்னே விதி?

நீளக்கிடந்து நித்திலவென்
அலையெறியும்
கோலக் கடலும் கொலுவாச்சோ —
காலற்கு
ஏறும் பரியோ எமதோன் உயிர்
கொண்ட
வாறென் அறியோமிவ் வாரி.

அன்பொழுகுஞ் செஞ் சொல்லும்
அருள் வீசும் புன்சிரிப்பும்
என்பும் பிறர்க்குதவும் இற்பண்பும் —
கொண்ட
பொன்சபா ரத்தினமாம் புனிதன்
பெரும் ஆசான்
விண்கொண்ட தென்னே விதி.

**வேலணைக் கல்விக்கோட்ட அலுவலக உத்தியோகத்தர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள்.**

அக்காலத்தில் நாகமணி - சின்னம்மா தம்பதிகளின் ஏக புத்திரியான மனோன்மணி அவர்களை மணந்து இல்லற —எனும் நல்லற வாழ்வை ஆரம்பித்தார்.

இல்லறத்தில் ரமணிகா, ரமணன் ஆகிய இருகுழந்தைகளையும் இருகண்களாகக் கிடைக்கப்பெற்று பூரிப்புடன் வாழ்ந்து வந்தார். இருந்தபோதும் அவரது உள்ளம் மக்களுக்குச் சேவை செய்வதையே பெருவிருப்பாகக் கொண்டிருந்தது. இதன் காரணத்தினால் தாம் பார்த்து வந்த தொழிலை விடுத்து புனிதமான ஆசிரியத் தொழிலை நாடினார்.

**ஆசிரிய சேவையில்**

அதன் பயனாக 1968இல் கிளிநொச்சி இராமநாதபுரத்தில் ஆங்கில உதவி ஆசிரியராக ஆசிரிய உலகில் நுழைந்தார். பின்னர் பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் விவசாய விஞ்ஞான பாடத்தில் விசேட பயிற்சி பெற்று நயினாதீவு மகா வித்தியாலயத்தில் ஒருவருட காலம் கடமை ஆற்றினார்.

இக்குறுகிய கால சேவை நயினை வாழ் மக்களின் மனதில் ஆழப்பதிந்திருந்தது. அதனைத் தொடர்ந்து புங்குடுதீவு ஸ்ரீகணேச மகாவித்தியாலயத்தில் பத்து வருடங்களுக்கு மேலாக சேவையாற்றினார்.

இக்காலத்தை இவர் தான் பிறந்த நாட்டுக்குச் சேவை செய்யக் கிடைத்ததோர் அரிய சந்தர்ப்பமாகக் கருதி தனது முழுநேரத்தையும் செலவிட்டார்.

**வித்தியாலயத்தின் வளர்ச்சி**

(விளம்பரஇல: 27447)

டிப்ளோமா பெற்ற இவர் மாலை நேர வகுப்புகள் வைத்து மாணவர் கல்விக்கு உரமூட்டினார். இவரது வாழ்வில் அன்பும் இரக்கமும் இரட்டைக் குழந்தைகளாகத் தவழ்ந்தன. இதனால் இவர் புங்கையூரில் 'சபா' என்னும் செல்லப் பெயர் கொண்டு செல்லமாக அழைக்கப்பட்டு வந்தார்.

**கொத்தணி உதவியாளராக**

பின்னர் யாழ். சென் மேரிஸ் வித்தியாலயத்தில் சிலகாலம் பணியாற்றிய பின் 1988இல் மண்டைதீவுக் கொத்தணி உதவியாளராக கடமையாற்றினார். இக் காலத்தில் இவரது சிறந்த சேவையை அறிந்துகொண்ட மண்டைதீவு மக்கள் இவரை நன்றியுணர்வுடன் நேசித்தனர்.

இச்சேவையின் போது அதிபர் பரீட்சையில் சித்தி அடைந்து அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாசாலை, வேலணை சைவப்பிரகாச வித்தியாசாலை ஆகியவற்றிலும் சில காலம் அதிபராகக் கடமையாற்றினார். இக் காலங்களில் கூட இவர் கல்வி கற்பதில் சிறந்ததோர் நன் மாணாக்கனாகத் திகழ்ந்தார் என்பதற்குச் சான்றாக கலைப் பட்டதாரி பரீட்சைக்குத் தோற்றி ஓர் கலைப் பட்டதாரியானார்.

இதன் பின்னர் வேலணை கல்விக் கோட்டத்தின் திட்டமிடல் உதவிக் கல்விப் பணிப்பாளராக இணைந்து பணியாற்றினார் தீவக மக்களும் மாணவர்களும் இடம் பெயர்ந்த தற்போதைய நிலை

களுமங்களையும் அவதானித்து செய்து முடிக்கும் சிறப்பு இவரிடத்திலே இயல்பாகவே கைவரப் பெற்றதொன்றாக இருந்தது. இப் பகுதிமாணாக்கரின் கல்வி வளர்ச்சியிலும் இவர் தம் நலனிலும் கூடிய அக்கறை கொண்டவராக விளங்கினார். மாணவர் இலவச மதிய உணவுமுத்திரை இலவச சீருடை, இலவச பாடப் புத்தகம் என்பனவற்றை காலதாமதம் இன்றி மாணவர்களுக் கிடைக்கச் செய்வதில் முன்னின்று உழைத்தார்.

இது மட்டுமல்லாது தமிழ்த் தினப்போட்டி, பண்ணிசைப் போட்டி, உடற்பயிற்சிப் போட்டி, ஆங்கில தினப் போட்டி போன்ற பல்வேறு போட்டிகளையும் உரிய காலத்தில் சிறப்பாக நடத்தினார்.

எங்கள் கோட்டத்தின் மாணவர் நலன்கருதி கல்வி வளர்ச்சிக் கழகத்துக்கு தன்

சியும் அடைந்தார். இக் காலத்தில் ஸ்ரீகணேச மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கச் செயலாளராகவும் இலங்கைத் தமிழர் ஆசிரியசங்க தீவகப் பொருளாளராகவும் திறம்படச் சேவையாற்றினார்.

தன்னடக்கம் சகோதரத்துவம்

ஆசிரிய வாண்மை விருத்தி கருதி அவர்களுக்கு வேண்டிய பல்வேறு கருத்தரங்குகளையும் ஒழுங்கு செய்து நடத்தினார். தான் ஓர் அதிகாரி என்ற எண்ணமின்றி தன்னடக்கத்துடனும், சகோதர மனப்பான்மையுடனும் கல்விப் பணிப்பாளர்களுக்கும், ஆசிரிய ஆலோசகர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் ஏன் தன்னைச் சேர்ந்தோர் அனைவருக்குமே இன்முகத்துடன் உதவி புரிந்து வந்தார்.

இவரது வாழ்வில் "முடியாது" என்ற சொல்லுக்கே

கண்டார். இவரது இத்தகைய வியத்தகு திறமையைக் கண்டு யாழ். கல்வித் திணைக்களத்தினர் 1993இல் இவரை முகாமைத்துவப் பிரிவில் இணைத்துக் கொண்டனர்.

**மீண்டும் கற்பித்தலில்**

கல்வி கற்பிப்பதிலும், மாணவருக்கு வழிகாட்டலிலுமே இவர் பூரண இன்பம் கண்டவர்.

பாடப்புலத்தில் எப்பாடமாக இருந்தாலும் சரி கற்பிக்கக்கூடிய திறமை இறைவனது கொடையாக அமைந்து முழு நிறைவான ஆசிரியனாகத் திகழ்ந்த இவரது உள்ளம் மீண்டும் கற்பித்தலை நாடியது. அதன் பயனாக திருப்பவும் யாழ். புங்குடுதீவு ஸ்ரீகணேச மகா வித்தியாலயத்திற்கு 1-8 93 இல் அதிபராக நியமனம் பெற்றார் இத்தேசத் தொண்

4 ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
மாநகராட்சி மன்று
27-9-1993
யாழ்ப்பாணம்

# சின்னஞ் சிறு விளம்பரம்

**விற்பனைக்குண்டு**

கரம், பீற்றூட், சுறிமின காய் விதைகள் விற்பனைக் குண்டு; தொடர்பு: பிள்ளை யார், 251A, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

(27437)

**திருத்தவேலைகளுக்கு**

உங்கள் கடிகாரங்கள், றேடியோக்கள் அனைத்தும் நிபுணர்களால் உத்தரவாதத் துடன் திருத்திக் கொடுக்கப் படும். டிக்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி, (வானவில் அருகில்), யாழ்ப்பாணம். கிளை: கண்டி வீதி, சாவகச் சேரி.

(6507)

**புலமைப் பரிசில் பரீட்சை**

1993இல் நடந்த பரீட்சை வினா விடையும் உள்ளடக் கிய கடந்தகால வினா-விடை வந்து விட்டது. உயர்கல்வி நிலைய சேவைகள் நிலைய வெளியீடு; விலை ரூபா 85/- குறைந்தளவு பிரதிகளே உண்டு. அறிவகம் புத்தக சாலை, 374, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

(சி 6133)

**தையற் பயிற்சி**

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் நீர்வேலிக் கிளையி னர் மகளிருக்கான தையற் பயிற்சி நிலையம் ஒன்றை நீர்வேலி காமாட்சியம்மாள் கோயில் முன்றிலில் உள்ள மண்டபத்தில் ஆரம்பிக்வுள்ள னர். (க-110)

**இலவச வகுப்பு**

இலவச சமய மற்றும் திருக் குறள் வகுப்பு கொழும்புத் துறைவீதி, 16ஆம் இலக்க ஊனமுற்றோர் நிலையத்தில் பிரதி ஞாயிறு தோறும் காலை 9-30 மணி தொடக்கம் முன்னாள் அதிபர் திரு. கா. கணேசதாசன் அவர்களால் நடத்தப்பட்டு வருகின்றது.

**மண்எண்ணெய் வழங்க நடவடிக்கை**

கோப்பாய் வடக்கு கிராம சேவையாளர் பிரிவில் வெங்காயம், பயறு பயிரிடுவோருக்கு மண் எண்ணெய் வழங்க நடவ டிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**தமிழ்ப்...**

(8 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டனது சேவை இப்பூவுலகத் தவர்களுக்குப் போதும் எனக் கருதிப் போலும் இறைவன் இப்புண்ணிய ஆன்மாவை தனது சேவைக்கென 29-8-93இல் அமர்த்திக் கொண்டார்; துயருறும் அவ ரது குடும்பத்தாருடன் நாமும் இணைந்து அவரது ஆத்மா சாந்தி அடையப் பிரார்த் திக்கிறோம்.

# பாரதி

சித்தன்கேணி

**A/L 94 PAPER CLASS**

ஆரம்பம்:
28 — 09 — 1993
செவ்வாய் 3-30

**CHEMISTRY**
Mr. சிவசோதி
B. Sc. (Hons)

**PURE/APP.**
Mr. துரையப்பா
B. Sc. (Hons)

**A/L 94, 95**
புதிய பிரிவு நடைபெறுகின்றன.

(6671)

# வாழ்த்து

1993 செப்டம்பர் 29ஆம் திகதி (நாளை) புதன் கிழமை இலங்கைவேந்தர் மன்றக் கலாமண்டபத்தில் தனது

## இசை அரங்கேற்றம் காணும்

செல்வி

## பரமேஸ்வரி கணேசன்

அவர்கள் இசையுலகில் ஒளிவீசும் நட்சத்திரமாக என்றென்றும் மிளிர வேண்டுமென மனமார ஆசி கூறி வாழ்த்துகிறோம்.

இங்ஙனம்.
நாதஸ்வர வித்துவான்கள்
வி கோ. கானமூர்த்தி, வி. கோ, பஞ்சமூர்த்தி
சகோதரர்கள்

(27443)

வலி. கி. தெ. ப. ப. நோ. கூ. சங்கம்
நீர்வேலி.

# ஏல விற்பனை

மேற்படி சங்கத்தினால் சுவீப்பிங் மாவு, சீனி, கடலைப்பருப்பு, சர்க்கரை போன்ற பொருள்கள் ஏலவிற்பனை மூலம் விற்பனை செய்யப்படவுள்ளன.

ஏலவிற்பனை நடைபெறும் திகதி, நேரம்;
02 10-1993 ஆம் திகதி சனிக்கிழமை
மு. ப. 10-00மணி

ஏல விற்பனை நடைபெறும் இடம்;
சங்க தலைமைக் கந்தோர் வளவு

தேவையானோர் குறித்த தினத்தில் ஏல விற் பனையில் பங்குபற்றி பெற்றுக் கொள்ளலாம். ஏல விற்பனை மூலம் பொருள் பெறத் தகுதி பெறுவோர் உடன் பணத்தை செலுத்தி அன்றே பொருள்களை பெற்றுக்கொள்ள வேண்டும்.

-பொது முகாமையாளர்.

நீர்வேலி,
1993-09-21

[கி/6971]

உ
சாவகச்சேரி

## அருள்மிகு ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

## ★ மஹா சண்டிஹோம அழைப்பு ★

அன்புடையீர்!

வியாழனது மாற்றம் 12-10-1993 அன்று ஏற்படு வதை முன்னிட்டு நாட்டின் நன்மை கருதியும் கீழே கொடுக்கப்பட்டுள்ள நக்ஷத்திரத்திற்குரிய தோஷம், உடையவர்கள் பங்குபற்றவும் மேலே குறிப்பிட்டுள்ள சண்டிஹோமம் சென்ற வருடத்திலும் பார்க்க வெகு சிறப்பாக நடைபெறும்.

**08 — 10 — 1993 முதல் 10 — 10 — 1993 வரை**
(வெள்ளிக்கிழமை, சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை)

கணபதிஹோமம், நவக்கிரகஹோமம்,
துர்க்காஹோமம், சண்டிஹோமம்
என்பன தொடர்ந்து 3 நாட்கள் நடைபெறும்.

தோஷமுடையவராகக் கருதப்படுபவர்களது ராசிகள்
இடபராசி, சிம்மராசி, துலாராசி,
விருட்சிகராசி, மகரராசி, மீனராசி.

இந்த உபயத்தில் பங்குபற்ற விரும்புபவர்கள் கூடிய விரைவில் ஆலயத்தில் தொடர்பு கொள்ளவும். அடி யார்கள் அனைவரும் மூன்று நாட்களும் தொடர்ந்து காலை, மாலை பங்குபற்றி மூன்றாம்நாள் காலை ஆயிரத்தெட்டு பால்செம்பு எடுத்து அம்பிகைக்குப் பாலாபிஷேகம் செய்ய உதவுக. இவ்யாகத்தில் பூஜை யில் வைக்கப்பட்ட யந்திரம், நூல் பெற்றுக்கொள் ளலாம்.

இவ்வேள்வி சிறப்பாக நடைபெற அடியார்கள் தேவையான நிதியுதவி, தானியவகை, சமித்துவகை, கற்பூரம், தேங்காயெண்ணெய், பால், தயிர், பழவகை, பன்னீர், இளநீர், கரும்பு, சொம்பு, பூமாலை என் பன கொடுத்துதவி; சர்ர்த் தொண்டுகள் புரிந்து அன்னை துர்க்காதேவியின் அருட்கடாட்சம் பெற்றுய்யு மாறு வேண்டுகின்றோம்.

அனைவரும் வருக! அன்னையருள் பெறுக!!

இங்ஙனம்;
பிரம்மஸ்ரீ ப. மஹாகணபதி சர்மா,
(ஆலய தர்மகர்த்தா).

(27445)

கம்போடியாவின் மன்னராக

# இளவரசர் சிஹனுக் முடி சூட்டப்பட்டார்!

நொம்பென், செப். 28

கம்போடியாவின் மன்ன ராக இளவரசர் நொரடோம் சிஹனுக் கடந்த வெள்ளி மாலை முடிசூட்டப்பட்டார்.

அரசியல்வாதியாவதற்காக 40 ஆண்டுகளுக்கு முன்னர் இளவரசர் சிஹனுக் முடி துறந்தார்.

13 ஆண்டு கால சிவில் யுத்தத்தின் பின்னர் ஐ. நாவின் மேற்பார்வையில் கம்போடியாவில் அண்மை யில் தேர்தல் நடந்தது. அத னைத் தொடர்ந்து அரசியல் நிர்ணய சபை தயாரித்த புதிய அரசமைப்பு, மீண்டும் கம்போடியாவில் முடியாட்சி ஏற்பட வழி வகுத்தது. மீண் டும் மன்னராக முடிசூட்டப் பட்ட இளவரசர் சிஹனுக் முதலில் புதிய அரசமைப்பில் கையெழுத்திட்டார்.

(த-எ)

உரும்பராய்

# புனித மைக்கல் திருவிழா

மேற்படி ஆலயத்தின் வருடாந்த திருவிழா நாளை புதன்கிழமை (29 - 09 - 1993) காலை 7-00 மணிக்கு யாழ். ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண் டகை தலைமையில் நடைபெறும். திருவிழா முன்னேற் பாடாக 20 - 09 - 1993 திங்கள் மாலை கொடியேற் றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து நவநாட்கள் நடை பெற்று வருகின்றன.

28 - 09 - 1993 மாலை நற்கருணை ஆசீரும், நற் கருணைப் பவனியும் இடம் பெற்று, மறுநாள் காலை 7 00 மணிக்கு ஆடம்பரத் திருப்பலியும் - புனிதரின் திருச்சொருபப் பவனியும் இடம்பெறும். திருவிழா ஏற் பாடுகளை உரும்பராய் பங்குத் தந்தை J. B. அன்ரனி தாஸ் அடிகளார் மேற்கொண்டு வருகிறார்.

- பங்குச் சபையினர்.

(6506)

# கண்ணீர் அஞ்சலி

யாழ்./நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை ஆசிரியை செல்வி தி. தயாநிதி அவர்களின் தந்தையார்

## கதிரவேலு திருஞானசம்பந்தர்

அவர்கள்


24.09-1993 வெள்ளிக்கிழமை, மறைந்ததை யிட்டு ஆசிரியைக்கும் அவரின் குடும்பத்தின ருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித் துக் கொள்கிறோம்.

அதிபர், உப அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

யாழ்./நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை.

(27449)

# நீங்கா நினைவு



| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 12 — 08 — 1940 | 28 — 09 — 1992 |

## அமரர் ச, பாலசிங்கம்

(பாலா)
(முன்னாள் உதயன் ஊழியர், முன்னாள் வாக்கஸ் ஊழியர்)

எங்களுடன் பணியாற்றிய காலத்தில் கடமை யில் கண்ணாக இருந்து, எல்லோருக்கும் நண்பனாக விளங்கிய உங்கள் சிரிப்பையும் நகைச்சுவை இயல்பை யும் இன்றும் நினைக்கிறோம். ஆண்டு பல சென்றா லும் உமது நினைவு நீங்காது.

உங்கள் ஆத்மா சாந்திபெற இறைவனை இறைஞ்சுகிறோம்.

உதயன் நிர்வாகத்தினரும், ஊழியர்களும்.

292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## நெருக்குதலுக்கு முன்னோடியா?

கடந்த நான்கு, ஐந்து நாட்களாக ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் மக்கள் தொடர்பு சாதனங்களான வானொலியும், தொலைக்காட்சியும் ஒரு விடயத்தைப் பிரபல்யப்படுத்த முயல்கின்றன. வடபகுதிக்குக் கொண்டு வருவதற்குத் தடை செய்யப்பட்ட பொருள்களை "கடத்துவது" சம்பந்தமான செய்திகளை அடிக்கடி முக்கியத்துவம் கொடுத்து வெளியிடுகின்றன.

யூரியா உரம் ஏற்றப்பட்டதாகக் கூறி "றுகுணு" கப்பல் யாழ்ப்பாணம் வராமல் திருகோணமலையில் 3 தினங்கள் தடுத்து வைக்கப்பட்டது. லொறிகளின் அடிப்பாகங்களில் பற்றறி மற்றும் தடை செய்யப்பட்ட பொருள்களை ஒளித்து வைத்து வவுனியா ஊடாகக் கொண்டு வரும் முயற்சி கண்டு பிடிக்கப்பட்டதாக இன்னொரு செய்தி.

இந்தச் செய்திகளைத் தொடர்ந்து, வடபகுதி நோக்கி வந்த பத்துக்கும் மேற்பட்ட லொறிகளைப் படையினர் தாண்டிக்குளத்தில் தடுத்து வைத்துள்ளனர்.

அரச படைகள் வடபகுதி மீது ஒரு பெரிய தாக்குதலை நடத்துவதற்கு ஆயத்தங்களைச் செய்து வருவதாக இம்மாதம் முதல் வாரம் தொடக்கம் கொழும்பில் பெரிதாகக் "கதைகள்" அடிபட்டு வருகின்றன. இராணுவ நடவடிக்கையை தீவிரப்படுத்தும் அதே வேளை பொருளாதார நெருக்குதலையும் அதிகரிப்பதன் மூலம் வடக்கு மக்களின் கழுத்தைத் திருக முடியும் என்று அரசு திட்டமிடலாம் அல்லவா?

"கடத்தல் முயற்சிகளைப் பெரிது படுத்தி, அவற்றை முன்வைத்து, காரணங்களாக மாற்றி பொருளாதார நெருக்குதல்களுக்கு வழி கோலும் தந்திரமாக இது இருக்கலாம்.

தனது இராணுவ நடவடிக்கைகளை நியாயப்படுத்தப் 'பயங்கரவாதம்' என்ற வாதத்தை முன் வைப்பது போல—

பொருளாதாரத் தடைக்கும் மேலாக நெருக்குதலை நியாயப்படுத்த 'கடத்தல்' முயற்சிகளைக் காரணமாகக் காட்டுவதற்கு— அரசு திட்டமிடுகிறது!

ஆனையிறவு பூநகரிப் பாதைகளை அரசு மறித்து வைத்திருக்கிறது, கிளாலியைத் தடை செய்து வைத்திருக்கிறது. இந்தப் போக்குவரத்துத் தடைகளை மீறிக் கொண்டு பொருள்கள் வடபகுதி வந்து சேர்கின்றன. உண்மையில் இது அரசாங்கத்துக்குப் பெரும் தோல்வியே!

இந்தத் தோல்வியை மறைப்பதற்கு, கட்டுப்பாடுகளை மேலும் தீவிரப்படுத்துவதே ஒரே மார்க்கம் என்றும் அரசு கணக்குப் போட்டிருக்கலாம்.

இவ்வாறு பல காரணங்களைத் திரட்டிய உள்நோக்கம் ஒன்றுடனேயே "கடத்தல்" குறித்து அரசு பிரசித்தம் செய்யத் தொடங்கியுள்ளது.

அவ்வாறில்லை எனின், "கடத்தல்" என்று காட்டி படை மற்றும் சிவில் அதிகாரிகள் தமிழ் வர்த்தகர்களிடம் லஞ்சம் கறக்கும் தந்திரமே இது. ஏற்கனவே பெறும் லஞ்சம் போதாது என்று நினைத்ததால் இப்படி ஒரு மறைமுக 'வரி' போடும் திட்டம் வகுக்கப்பட்டிருக்கலாம்!

கொழும்பில் தமிழர்களைக் கைது செய்து சம்பாதிப்பவர்களுடன் போட்டி போட்டு தாம் அதிகமாகத் தேடிக் கொள்ளும் திட்டமாகவும் இருக்கலாம்!

## இன்று

சுன்னாகம் மயிலணியில் உள்ள பகவான் ஸ்ரீ சத்யசாயி பாபா பஜனை நிலையத்தில் இன்று புதன் மாலை 8.30 மணிக்கு ஷிரடி சாயி பாபா ஜயந்தி விழா விசேட பஜனையுடன் நடைபெறும். (த-89)

o o o

யாழ். மாவட்ட விவசாயிகளின் இணைப்புக் குழுக் கூட்டம் ஒன்று இன்று செவ்வாய் காலை 10 மணிக்கு யாழ். செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும். (த-17)

o o o

யாழ். பிரதான வீதி திருமறைக் கலாமன்ற கேட்போர் கூடத்தில் இன்று மாலை 5 மணிக்குக் கூடும் பண்பாட்டவையில், "இலக்கியத்தில் பண்பாடு" என்ற பொருளில் முன்னாள் அதிபர் திரு. கா. கணேசதாசன் கருத்துரை வழங்குவார். (த-30)

o o o

யாழ். இந்துக் கல்லூரி விஞ்ஞான கழகத்தினர் ஏற்பாடு செய்துள்ள கொலரா நோய்த் தடுப்பு தொடர்பான கருத்தரங்கு ஒன்று இன்று முற்பகல் 11 மணிக்கு நியூ மாஸ்டர் கல்வி நிலையத்தில் இயங்கும் பாடசாலையிலும். பிற்பகல் 1 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியிலும் நடைபெறும். (த)

## நாளை

யாழ் மத்திய கல்லூரியில் நடைபெற்ற யாழ். மாவட்டப் பிரதேச செயலகங்களுக்கு இடையே இடம்பெற்ற தடகள போட்டிகளில் வலிகாமம் வடக்கு தெல்லிப்பளை பிரதேச செயலகம் ஐந்தாவது தடவையாக முதலிடம் பெற்றதை கௌரவிக்கும் முகமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள விருந்துபசாரம் நாளை புதன் கிழமை பிரதேச செயலகத்தில் நடைபெறும். (த)

o o o

மண்டைதீவு கல்விக் கோட்ட பாடசாலைகளில் பணியாற்றும் சங்கீத, நடன, ஆசிரியர்களுக்கான கூட்டம் ஒன்று நாளை புதன் காலை 9 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெறும். (த)

## சர்வதேச விழிப்பு இயக்க பிரதிநிதி கொழும்பில்!

சர்வதேச விழிப்பு இயக்கத்தின் (Intrnational Alert) உயர் பிரதிநிதியான செல்வி பிலிப்சன் கடந்த வாரம் கொழும்புக்கு வந்துள்ளார்.

இலங்கையில் தொடரும் இனப்பிரச்சினையில் சம்பந்தப்பட்ட தரப்பினர் சகலரையும் சந்தித்துப் பேச்சு நடத்தும் நோக்கில் தமது விஜயம் அமைந்துள்ளதாக அவர் கொழும்பில் தெரிவித்துள்ளார்.

இவ்வாரம் மட்டக்களப்பு பகுதிக்குச் செல்லவுள்ள அவர் அங்குள்ள அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களின் பிரதிநிதிகளை சந்தித்துப் பேசவுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

இதேவேளை —

செல்வி பிலிப்சனை யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யுமாறு கோரி உத்தியோகபூர்வ அழைப்பு ஒன்றை யாழ். அரச அதிபர் விடுத்துள்ளார்.

சர்வதேச மன்னிப்புச் சபையின் ஓர் அங்கமான சர்வதேச விழிப்பு இயக்கத்தில் நோர்வே உட்பட பல ஸ்கண்டிநேவிய நாடுகளின் புத்திஜீவிகள், கல்விமான்கள் அங்கம் வகிக்கின்றனர்.

### தீர்மானம்

சொந்த இடங்களைவிட்டு இடம்பெயர்ந்துள்ள தீவக இந்து மத குருமாரின் பிரச்சினைகளை ஆராய்ந்து பரிகாரம் காண நடவடிக்கை எடுக்க வேண்டும் என அண்மையில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட தீவகப்பகுதி இந்து மத குருமார் ஒன்றியக் கிளையினர் தீர்மானம் நிறைவேற்றியுள்ளனர். (க-152)

## ஊனமுற்றவர் தம்காலில் நிற்க முயற்சிக்க வேண்டும்

### லயன்ஸ் தலைவர் பேச்சு

யாழ்ப்பாணம், செப். 28

"ஊனமுற்றவர்கள் சொந்தக்காலில் நிற்க முயற்சிக்க வேண்டும். இதுவே அவர்களின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும்"

லயன்ஸ் சமூகத்தின் பிராந்தியத் தலைவர் லயன் எஸ். இராமகிருஷ்ணன் யாழ். லயன்ஸ் கழகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டு கடந்த 12ஆம் திகதி யாழ். இந்துமகளிர் கல்லூரியின் விசாலாட்சி மண்டபத்தில் நடைபெற்ற அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பும் மூக்குக் கண்ணாடி வழங்கலும் நிகழ்ச்சியில் உரைநிகழ்த்தியபோது இவ்வாறு தெரிவித்தார்.

யாழ். லயன்ஸ் கழகத் தலைவர் லயன் இ. ஈஸ்வரகுமாரன் தலைமையில் இந் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்வை பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். இந்து மகளிர் கல்லூரியின் அதிபர் திருமதி தி. நாகராசா மங்கள விளக்கேற்றி தொடக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் ஊனமுற்றோர் புனர்வாழ்வு நிதிக்காக யாழ் லயன்ஸ் கழகத்தால் அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு நடத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து கண் பார்வை குறைந்தவர்கள் என கண் வைத்தியரால் உறுதிப்படுத்தப்பட்டு மூக்குக் கண்ணாடிகள் வாங்க வசதியற்ற இருபத்தைந்து பேருக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டன.

லயன்ஸ் கழகத்தின் வலய தலைவர் லயன் எஸ் இராஜேஸ்வரன், லயன்ஸ், லியோ கழக அங்கத்தவர்கள், றோட்டறி கழக பிரதிநிதிகள் உட்பட பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டார்கள். யாழ். பல்கலைக்கழக புவியியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் லயன் கே. குகபாலன் நன்றியுரை கூறினார். (க-162)

## ஆலயங்களில்

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோயில், நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் கோயில் ஆகியவற்றின் தேர்த் திருவிழா நாளை புதன்கிழமையும், தீர்த்தத் திருவிழா வியாழக்கிழமையும் நடைபெறும். (க-72-173-117)

o o o

உரும்பராய் புனித மைக்கல் ஆலயத்தின் வருடாந்தத் திருவிழா நாளை புதன் கிழமை காலை 7 மணிக்கு யாழ். ஆயர் மேதகு தோமஸ் சௌந்திரநாயகம் தலைமையில் நடைபெறும். (க)

### குள அபிவிருத்தி

வலிகாமம் தெற்கிலுள்ள ஏழாலை பெரிய தம்பிரான் குளம், உடுவில் குளம், சுத்தரோடை குளம் ஆகிய மூன்று குளங்களும் விரைவில் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன என வலிகாமம் தெற்கு உதவித் திட்டமிடல் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (க-45)

### கிளிநொச்சியில் சாரணர் பாசறை

கிளிநொச்சி மாவட்ட சாரணர் பாசறை விழா கடந்த 10ஆம் திகதி முதல் 4 தினங்களாக வல்வேரிக்குள வித்தியாலயத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. பொன். சபாபதி தலைமையில் நடைபெற்றது. கிளிநொச்சி மாவட்டக் கல்விப் பணிப்பாளர் திரு. க. சந்தசாமி பாசறையை ஆரம்பித்து வைத்தார். (க)

### கட்டாக்காலிகள்

காலபோக நெற்செய்கை ஆரம்பித்து விட்டதால் பொதுமக்கள் தம் ஆடு, மாடுகளைக் கட்டி வளர்க்க வேண்டும் என்றும் இதை மீறுவோருக்கெதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கடந்த 20 ஆம் திகதி வலிமேற்குப் பிரதேசச் செயலர் பிரிவில் உதவி அரச அதிபர் செல்வி றா. கனகரத்தினம் தலைமையில் நடைபெற்ற விவசாயக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (க-161)

### கைதடி ரயர் தொழிற்சாலை முகாம்

## மரணச்சடங்கில் கலந்து கொண்டோர் மூலமே வாந்திபேதி நோய் முதலில் பரவ ஆரம்பித்தது

கைதடி ரயர் தொழிற்சாலையின் சுற்றாடலில் அமைந்துள்ள அகதிமுகாமைச் சேர்ந்த பெண் ஒருவரின் மரணச்சடங்கில் கலந்துகொண்டோர் மூலமே வாந்திபேதிநோய் (கொலரா) முதலில் பரவ ஆரம்பித்தது.

67 வயது நிரம்பிய இந்தப் பெண் முழங்காலில் ஏற்பட்ட மூட்டுவாத நோய் காரணமாக இம்மாதம் 5ஆம் திகதி யாழ். போதனாவைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

இந்தநோய் குணமடைந்து 9ஆம் திகதி இப்பெண் முகாம் திரும்பினார்.

பின்னர் 10 ஆம் திகதி இவருக்கு திடீரென வயிற்றோட்டம் ஏற்பட்டது. 12ஆம் திகதி இவர் வயிற்றோட்டம் காரணமாக மரணமானார்.

இந்த மரணச்சடங்கில் இந்த அகதிமுகாமைச் சேர்ந்த பலர் கலந்துகொண்டனர் 14ஆம் திகதி இந்த நோய் இந்த அகதிமுகாமில் பரவ ஆரம்பித்தது.

வயிற்றோட்டத்தால் இறந்த பெண்ணின் மரணச்சடங்கில் கலந்து கொண்டோருக்கே முதலில் இந்தநோய் ஏற்பட்டது.

தற்போது கைதடி ரயர் தொழிற்சாலையின் சுற்றாடலில் அமைந்துள்ள அகதி முகாமில் இதுவரை இருபத்தைந்துக்கும் மேற்பட்டவர்கள் இந்த நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் ஒருவர் உயிரிழந்துள்ளார். மேலும் பலருக்கு இந் நோய்க்கான அறிகுறிகள் தென்படுகின்றன. இதனை அடுத்து மருந்துகள் வழங்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இப்பகுதியில் தொடர்ந்து வாந்திபேதி நோய் பரவுவதை தடுப்பதற்கு வட பிராந்திய சுகாதாரத் திணைக்களத்தினர் தீவிர நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர்.

வடபிராந்திய பிரதி சுகாதாரப் பணிப்பாளரும் தொற்றுநோய் நிபுணருமான டாக்டர் ஊ. சிவபாதசுந்தரம் இம்முகாமுக்கு தினமும் இரு தடவைகள் நேரடி விஜயம் செய்து நிலைமைகளை கண்காணித்தும் அங்குள்ளவர்களுக்கு சுகாதார அறிவுரைகளை அவ்வப்போது வழங்கியும் வருகிறார்.

மேலும் விடுதலைப் புலிகளின் நடமாடும் மருத்துவப் பிரிவினர் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவினர் மற்றும் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி ஆகியோர் இணைந்து 24 மணித்தியாலங்களும் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

வடபிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் இம்முகாமுக்குள் பாண், மீன் என்பன கொண்டு சென்று விற்பதை 2 கிழமைகளுக்கு முற்றாக தடைசெய்துள்ளார். முகாம் பகுதியில் உள்ள கிணறுகள் முற்றாக கலக்கி இறைக்கப்பட்டு குளோறின் இடப்பட்டுள்ளது. குண்டுக் கிணறுகள் மூடப்பட்டுள்ளன. 25 வயதுக்கு மேற்பட்டோரே இம் முகாமில் அதிகளவில் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கீரிமலை, இளவாலை, பண்டத்தரிப்பு, சங்கானை, மயிலிட்டி, குரும்பசிட்டி பகுதிகளைச் சேர்ந்த மக்களே இம் முகாமில் அகதிகளாகத் தங்கியிருக்கின்றனர்.

344 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் 803 கொட்டகை வீடுகளில் தங்கி உள்ளனர். இவர்களுக்கு இரண்டு குடி தண்ணீர் கிணறுகளும் இரண்டு குழாய்க் கிணறுகளும் அவலில் 2 கிணறுகளுமாக 6 கிணறுகள் இருந்து வருகின்றன.

அவற்றில் 2 குழாய் கிணறுகளும் பழுதடைந்த நிலையில் இருந்து தற்போது திருத்தி அமைக்கப்பட்டுள்ளன.

கிணற்றில் தண்ணீர் பற்றாக்குறை காரணமாக ஒரு மைலுக்கு அப்பால் சென்றே பலர் குடி தண்ணீரைப் பெற்றுவர வேண்டிய நிலையில் உள்ளனர்.

### குடி தண்ணீர் தட்டுப்பாடு

அங்குள்ள மக்கள் குடி தண்ணீர் பெறுவதற்கு அதிகாலை இரண்டு மணிக்கே முண்டியடிக்க வேண்டிய நிலையும் காணப்படுகின்றது.

மாலையில் குடி தண்ணீர் கிணற்றை பார்த்தால் வெறும் தரையே காணப்படுகிறது. சிறு குழிக்குள் காணப்படும் நீரை ஆவது பெற்றுவிட வேண்டும் என்ற ஏக்கத்துடன் பலர் அந்நீரையும் அள்ளிச் செல்வதை காணக்கூடியதாக இருக்கிறது.

25 மலசல கூடங்கள் அங்கு அமைக்கப்பட்டுள்ளன. அவையும் 8 குடும்பங்களுக்கு ஒன்று என்ற வகையிலேயே அமைக்கப்பட்டுள்ளன

பாதிக்கப்பட்டவர்களுக்கு நேரடியாக மருந்தை உட்கொள்ளக்கொடுத்தும்—

பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கும் தடுப்பு மருந்துகளை கொடுத்து அறிவுரைகளை வழங்கியும்— வருகின்றார். (இ-162)

**குளம் திருத்தி வளம் பெறுவோம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது நூலகம்
மாநகராட்சி மன்று
27 - 9 - 1993
யாழ்ப்பாணம்

# மரண அறிவித்தல்கள்

## சின்னப்பு தம்பிராசா

(இடைக்காடு, அச்சுவேலி)

இடைக்காடு, அச்சுவேலியை சேர்ந்த சின்னப்பு தம்பிராசா (ஓய்வுபெற்ற புகையிரத தலைமை பாதுகாவலர்) விசுவமடுவில் காலமானார்.

அன்னார் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், இருபாகரன் (ஆசிரியர், கிளி/முரசுமோட்டை முருகானந்த மகாவித்தியாலயம்), கீதா (சுவிஸ்), கிரிஜா (கனடா), முருகானந்தன் (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ராதாகிஷ்ணன் (சுவிஸ்), பாலசுப்பிரமணியம் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், மிதுலனின் அன்புப் பாட்டனாரும், காலஞ்சென்ற இராசம்மா, தெய்வானை, கதிராசி, நல்லையா (ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்), நாகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற சிற்றம்பலம், பெரியதம்பி, இராசஜேஸ்வரி, சின்னத்தம்பி (சிரேஷ்ட விரிவுரையாளர், கல்வியற்துறை, யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், வதிரியைச் சேர்ந்த டாக்டர் பாலகிஷ்ணனின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை 26-09 93 ஞாயிற்றுக்கிழமை விசுவமடுவில் நடைபெற்றது என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திரு. க சின்னத்தம்பி
(மைத்துனர்)

(சி 5973)

## வேலுப்பிள்ளை பொன்னம்மா

(அளவெட்டி வடக்கு)

அளவெட்டி வடக்கு முருக்கடியைச்சேர்ந்த வேலுப்பிள்ளை பொன்னம்மா நேற்று (27 - 09 - 93) காலமானார்.

இவர் காலஞ்சென்ற இராமலிங்கம் வேலுப்பிள்ளையின் அன்பு மனைவியும், கணேசமூர்த்தி, தனலட்சுமி, சுப்பிரமணியம் (தமிழர் புனர்வாழ்வுக் கழகம் சுன்னாகம்), கிருஷ்ணமூர்த்தி (அ. ம. ப. நோ. சங்கம்), சிவலிங்கம் (மக்கள் வங்கி காங்கேசன்துறைக் கிளை, சுன்னாகம்), கனகரத்தினம் (சவுதி அரேபியா), மங்கயேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும், பரஞ்சோதியின் சிறிய தாயாரும், கனகலிங்கம் (பிரபல வர்த்தகர் அளவெட்டி), திருஞானசம்பந்தர் (அதிபர் செல். மேரிஸ் மகா வித்தியாலயம் அவிசாவளை), சுந்தரலிங்கம் (சட்டக் கல்லூரி கொழும்பு), சிவபாக்கியம், கலாதேவி, கலைச்செல்வி, அருட்செல்வி ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் (28 - 09 - 93) செவ்வாய்க்கிழமை இன்று பகல் 12 மணிக்கு சண்டிலிப்பாய் வட்டச் செயலகத்திற்கு அருகில் உள்ள செ. சிதம்பரநாதனின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக பூதவுடல் விளாவெளி கல்லியங்காடு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

தகவல்;
வே சுப்பிரமணியம்
(மணியண்ணை)
(மகன்)

சண்டிலிப்பாய் (27461)

## தம்பையா சதாசிவம்

கொழும்புத்துறையை பிறப்பிடமாகக் கொண்ட தம்பையா சதாசிவம் ஓய்வு பெற்ற அதிபர்) நேற்று (27-09-93) கொழும்புத்துறையில் காலமானார்.

இவர் திருமதி தெய்வானைப்பிள்ளையின் (ஓய்வு பெற்ற ஆசிரியர்) அன்புக் கணவரும், சுமதியின் அருமைத் தந்தையாரும், பேரம்பலம், காலஞ்சென்ற பரமநாதன், காலஞ்சென்ற பூரணம் ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (28-09 93) மாலை 3.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

தகவல்:
திருமதி சதாசிவம்
(மனைவி)

26, புங்கங்குளம் வீதி,
கொழும்புத்துறை.

(27462)

## சிறீசந்திரன் ஜனகன்

நாவலடி, வரிக்காட்டைச் சேர்ந்த கந்தசாமி சிறீசந்திரன் (ஆசிரியர், செருடாவில் இ. த. க. பாடசாலை) - சிறீசந்திரன் ஞானேஸ்வரி தம்பதிகளின் ஏக புதல்வன் ஜனகன் (மாணவன், அம்பர்மலை அ.த.க. பாடசாலை) நேற்று அகால மரணமானார்.

இறுதிக் கிரியைகள் இன்று 28-09-93 செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு மயிலியதனை மயானத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவு செய்து ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
க. சிறீசந்திரன்
(தகப்பனார்)

(27463)

யாழ்., சாவகச்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

யில் குறிப்பிட்ட விசேட வார்ட் நோயாளர்களால் நிறைந்துவிட்டதால் வேறு வார்டுகளிலும் அனுமதிக்க வேண்டிய நிலை உருவாகி உள்ளது.

இதற்கென இன்னொரு வார்டினை ஏற்படுத்தி வாந்திபேதி நோயாளருக்கான இடவசதியை விஸ்தரிக்க யாழ். ஆஸ்பத்திரி நிர்வாகத்தினர் முயற்சி மேற்கொண்டுள்ளனர்.

சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் நேற்று வரை வாந்திபேதி நோயாளர் 11 பேர் அனுமதிக்கப்பட்டதாக எமது தென்மராட்சி செய்தியாளர் அறிவிக்கிறார்.

வாந்திபேதி நோயைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டு சுகாதாரத் திணைக்கள அதிகாரிகளும், இலங்கை செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகளும் கைதடி-நுணாவில், மிருசுவில், தவசிக்குளம், கெற்பலி ஆகிய இடங்களுக்கு அடிக்கடி விஜயம் செய்து வருவதாக அவர் அறிவிக்கிறார். (அ-117-15)

மன்னார்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வத்தினர் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் இராணுவச் சிப்பாய் ஒருவர் கொலைப்பட்டதாகவும் ஏனையோர் காயங்களுடன் தப்பியோடினர் என்றும் 'புலிகளின் குரல்' அறிவித்தது.

இத்தாக்குதலின் போது இராணுவத்திடமிருந்து ரி 56 - 1 ரகத் துப்பாக்கி ஒன்றையும், அதற்குரிய மகஸின் — ஒன்று, ஹோல்ஸர் — ஒன்று, நடுத்தர ரவைகள் — 120 ஆகியவற்றையும் புலிகள் கைப்பற்றினர்.

இதேசமயம் —

மன்னார் பரப்புக்கடந்தான் பகுதியில் நேற்று முற்பகல் 11மணியளவில் புக்காரா விமானங்கள் குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தியதாகவும் தெரிய வந்தது. (உ-எ-த-க-6)

கூற்று...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அறிவித்துள்ளார்.

இது சம்பந்தமாக அவர் பின்வருமாறு தெரிவித்திருக்கிறார்.

கடற்புலிப் பிரமுகர் சூளுரை என்ற தலைப்புடன் விரைவில் ஒரு விமானப் படை அமைப்போம் என்று வெளியான கூற்றுத் தவறானது.

இக்கூற்றுக்கான சரியான விளக்கம் வருமாறு—

உலகின் எந்த ஒரு விடுதலைப் போராட்டமும் கொண்டிராத கடற்படை என்கின்ற ஒருபக்க பலமான அமைப்புடன் இன்று தமிழீழ விடுதலைப் போராட்டம் எமது தலைவனின் தெளிவான வழிகாட்டலுடன் அமைக்கப்பட்டு, பல சாதனைகளையும் சரித்திரங்களையும் புரிந்து முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. விமானப் படைப் பலமும் எம்முடன் இன்று இருக்கும் என்று சொன்னால் எம்முடைய இறைமைகளைக் காக்கும் பூரணமான ஒரு படையாக நாம் இருப்போம்—என்று தெரிவித்துள்ளார்.

தமிழரின்...

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அகிம்சைப் போராட்டத்திலும் சளைத்தவர்களல்ல என்பதை திலீபன் உலகுக்கு நிரூபித்துக் காட்டியுள்ளார். என்றார்.

யாழ். மத்தியகல்லூரி அதிபர் சண்முகநாதபிள்ளையும் கருத்துரை வழங்கினார். நிகழ்வில் கலைபண்பாட்டுக் கழகத்தின் கும்மி, வில்லுப் [illegible] மாணவர்களின் கவிதை கட்டுரைகளும் இடம் பெற்றன. (த-110)

# போசாக்கின்மை பாதிப்பு பற்றிய சரியான விவரம்

யாழ்ப்பாணம், செப். 28

''குடாநாட்டில் 93 சதவீத குழந்தைகள் போசாக்கின்மையால் பாதிப்பு' என்ற தலைப்பில் 18 - 09 - 93 உதயனில் வெளிவந்த தகவல் சரியானது அல்ல என்று —

குழந்தைகளின் போசாக்கு நிலைமை குறித்து ஆய்வு செய்த பல்கலைக்கழக வைத்திய பீடக் குழுவின் தலைவர் டாக்டர் என். சிவராசா தெரிவித்துள்ளார்.

அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ள மூன்றுவகையான அளவுகளும் வெவ்வேறு விதமான அளவீடுகளைக் கொண்டு கணிக்கப்பட்டவை இந்த மூன்று அளவுகளும் போசாக்கின்மையின் மூன்று வடிவங்களைக் குறிக்கும் அவற்றைக் கூட்டிக் கூட்டுத் தொகையாகக் கொடுக்க முடியாது —என்று அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

போசாக்கின்மையால் பாதிக்கப்பட்ட மூன்று வயதுக்குட்பட்ட குழந்தைகளின் சரியான விவரம் பின்வருமாறு அமையும் என்பதை அவர் எடுத்து விளக்கியுள்ளார்.

1. உயரத்திற்கேற்ற நிறை இல்லாதவர்கள் (அண்மைக்கால போசாக்கின்மையால் பாதிக்கப்பட்ட குழந்தைகள்) — 18 9 வீதம்.

2. வயதிற்கேற்ற உயரம் இல்லாதவர்கள் (நீண்டகாலப் போசாக்கின்மையால் பாதிக்கப்பட்ட குழந்தைகள்) — 31.4 வீதம்.

3. வயதிற்கேற்ற நிறை இல்லாதவர்கள் — 40 வீதம், (அ)

# வடமராட்சிப் பகுதியில் பீரங்கி, ஹெலித் தாக்கு!

வடமராட்சி, செப். 28

வடமராட்சி வடக்கு கடற்பரப்பில் ஸ்ரீலங்கா கடற்படையினர் நேற்றுப் பீரங்கித் தாக்குதல்களைப் பல தடவைகள் மேற்கொண்டனர்.

இப்பகுதியில் ஹெலிக்கொப்டரிலிருந்தும் கலிபர் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

இத்தாக்குதல்களினால் மீனவர்கள் சிலரின் பிளாஸ்திக் படகுகள் சேதமடைந்தன.

பீரங்கிக் குண்டுகள் வல்வெட்டித்துறை கரையோரங்களில் வந்து விழுந்து வெடித்தன.

நேற்றுக் காலை 4.45 மணியளவில் இரண்டு விசைப் படகுகளில் வந்த கடற்படையினர் பொலிகண்டி, கம்பர், இன்பருட்டி, வல்வெட்டித்துறை, தொண்டமானாற்றுப் பகுதிகளில் கடலில் தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர் படகுகளை நோக்கிப் பீரங்கித் தாக்குதல்களை நடத்தினர். கரையோரப் பகுதிகளில் உள்ள குடியிருப்புகளை நோக்கியும் விசைப் படகுகளில் இருந்து பீரங்கித் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

அப்போது வல்வெட்டித்துறை கரையோரப் பகுதிகளில் குண்டுகள் விழுந்து வெடித்தன.

இதேவேளை காலை 6 மணியளவில் வந்த ஹெலிக்கொப்டர் ஒன்றும் மேற்கூறிய இடங்களில் குடியிருப்புப் பகுதிகள் மீது பரவலாகக் கலிபர் தாக்குதல்களை நடத்தியது.

மீண்டும் நேற்றுக் காலை 8.30 மணியளவிலும் ரோந்து வந்த கடற்படைப் படகுகள் கரையோரக் குடியிருப்புக்களை நோக்கி பீரங்கி வேட்டுக்களைத் தீர்த்தன. (அ-173-155-109-15)

## ஹெலித் தாக்கு

தென்மராட்சி, செப். 28

நேற்று முன்தினம் மாலை 5.00 மணிக்கு ஆலிப்பளை இறங்கு துறைப் பகுதியில் நின்ற லொறிகள், படகுகளை நோக்கி ஹெலிக்கொப்டர் ஒன்று பலதடவைகள் வட்டமிட்டு வேட்டுக்களைத் தீர்த்தது. (உ-117)

கிளாலிக்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

டன.

கணிசமான எண்ணிக்கையான படகுகள் கடலில் பயணத்தை ஆரம்பித்த வேளையில் இத்தாக்குதல் இடம்பெற்றது.

படகுகளில் ஏறுவதற்காகக் கரையில் காத்திருந்த எஞ்சிய பயணிகள் சிதறி ஓடி பனை, தென்னை மரங்களுக்குப் பின்னும், பதுங்கு குழிகளுக்குள் பதுங்கி கொண்டனர்.

இத்தாக்குதல்களினால் பொதுமக்களுக்கு ஏற்பட்ட சேதங்கள் குறித்து விபரமான தகவல்கள் ஏதும் இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை இடைக்கவில்லை

அனேகமான குண்டு வீச்சுத் தாக்குதல்கள் கடற்பகுதியிலேயே இடம்பெற்றதால் கரையில் இருந்தவர்கள் ஆபத்து ஏதுமின்றித் தப்பிக் கொண்டதாக மூற்கொண்டு கிடைத்த செய்திகள் தெரிவித்தன. (உ-த-9-15)

நீதிமன்றம்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

சேகரன், சண்முகவடிவேலு, ரங்கநாதன், பாஸ்கரன், கனகசபாபதி ஆகியோரைத் தவிர மற்ற ஆண் கைதிகள் தங்கள் ஆடைகளைக் களைந்துவிட்டு, ஜட்டியுடன் தங்கள் உடலில் எண்ணெயைப் பூசிக் கொண்டு நின்றார்கள்.

சிறை அதிகாரிகள் தங்களைக் கட்டிப்பிடித்து இழுத்துச் செல்ல முடியாது என்பதே இதன் நோக்கமாகும்.

குற்றஞ்சாட்டப்பட்டுள்ள ஐந்து பெண் கைதிகளும் ''சிறை அதிகாரிகள் தங்களை நெருங்கினால் தற்கொலை செய்து கொண்டாவது தாங்கள் குற்றஞ்சாட்டுவோம்'' என்று எச்சரித்தனர்.

இதனைத் தொடர்ந்து, சிறை அதிகாரிகள் நீதிமன்றம் சென்று, கைதிகளைத் தங்களால் கொண்டுவர முடியவில்லை என்று நீதிவானிடம் தெரிவித்தனர்.

கைதிகளுக்காக ஒரு மணித்தியாலயமாகக் காத்திருந்த நீதிவான் சித்திக், வழக்கு விசாரணையை அடுத்தமாதம் 12 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

பார்வையாளர்கள் தம்மை சந்திக்கும் அறையில் அமைக்கப்பட்டுள்ள வயர் கண்ணாடித் தடுப்பை அகற்ற வேண்டும் என்று கோரி இக்கைதிகள் நீதிமன்றம் செல்லாமல் பகிஷ்கரித்து வருகின்றனர். (உ-எ)

3 கப்பல்களிலிரு...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பட்டது.

இக்கப்பலின் கீழ் தளத்தில் உள்ள உரம் இன்று காங்கேசன்துறையில் வைத்து கடற்படையினரால் சோதனையிடப்படவிருப்பதாகவும்—

அதன் பின்னரே அவற்றை பருத்தித்துறையில் இறக்குவது குறித்து தீர்மானிக்கப்படும் என்றும் தெரியவந்தது.

நேற்று வந்து சேர்ந்த 'சோமாரி' கப்பலில் தபால் பொதிகள் எவையும் எடுத்து வரப்படவில்லை இக்கப்பலில் தனியார் துறைக்கு தேங்காய் எண்ணெய் பரல்களும் எடுத்து வரப்பட்டன. (உ-3-109-173)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிரைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 393/3 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 28-09-1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org